முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 223/2015

வாதி தரப்பு சாட்சி-1 மணி (எ) சுப்பிரமணி திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி (எ) சுப்பிரமணி | கிராமம் | |
| த/பெ / க/பெ. | பழனியப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 64 |

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் பழனிகவுண்டம்பட்டி. 1 முதல் 3 பிரதிவாதிகள் அதே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் பழைய பி.யூ.சி படித்துள்ளேன். வழக்கு பரிகாரம் பற்றி தெரியுமா என்றால் தாவா சொத்து என்னுடையது என்றும், எனது சுவாதீனத்தில் உள்ளது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன். தாவா சர்வே எண்.398 ஆகும். சர்வே எண்.398 ல் எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு அயிட்ட சொத்திற்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.398 யை தவிர வேறு இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.398 ல் தான் எனது வீடு உள்ளது. மேற்படி நிலம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.398 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் நியாபகம் இல்லை.

2. தோராயமாக எவ்வளவு நிலம் இருக்கும் என்றால் சுமார் 8 ½ ஏக்கர் இருக்கும். சர்வே எண் 398 ல் வீட்டை தவிர மற்ற இடங்கள் புறம்போக்கு நிலமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தும் புறம்போக்கில் தான் உள்ளது என்றால் சரிதான். காலி இடம் யார் பெயரிலும் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது அனுபவத்தில் உள்ளது. எனது வீட்டிற்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எனது வீட்டின் நிலம் தனியாக உட்பிரிவு செய்திருக்கிறார்களா

என்றால் செய்திருக்கிறார்கள். எனது வீட்டின் பட்டா எண், உட்பிரிவு என்ன என்று தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்துக்கள் எனக்கு கிரையம் மூலமாகவோ, தானசெட்டில்மென்ட் மூலமாகவோ பாத்தியப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா எனது வீட்டு இடத்திற்கு உரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 எனது வீட்டிற்குரியது என்றால் சரிதான்.

3. எனது வீட்டிற்கு கிழக்கே செந்தில்குமார் வீடு உள்ளது. அவர் இவ்வழக்கில் தரப்பினரா என்றால் ஆமாம். அவரின் உட்பிரிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கு தென்புறம் பழனியம்மாள் மற்றும் ராஜலிங்கம் வீடுகள் உள்ளது. அவர்களது வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 4 ஆவணத்தில் எனது வீடு உள்ள பகுதி எங்கு உள்ளது என்றால் தெரியவில்லை. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். காலி இடத்திற்கு பட்டா வேண்டுமென கேட்டு மனு கொடுத்தேனா என்றால் வழக்கிற்கு முன்பு கொடுத்தேன். பின்னிட்டு கொடுக்கவில்லை. நான் விவசாயம் செய்து வருகிறேன்.

4. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா மகன்கள். நாங்கள் அனைவரும் ஒரே தெய்வத்தை வழிபடுபவர்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வருடம் ஆடி மாதமும் பங்காளிகள் அனைவரும் தாவா பிரச்சனைக்குரிய இடத்தில் ஒன்றுகூடி சாமி கும்பிடுவது பற்றி கூட்டம் கூடுவார்களா என்றால் இல்லை. அருகில் விநாயகர் கோவிலில் கூட்டம் போடுவோம். 3 இனத்தை சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி வழிபாடு நடத்த கூட்டம் கூடுவோமா என்றால் இல்லை. எங்கள் பங்காளிகள் மட்டும் கூடுவோம். எங்கள் இனத்தில் நான் பூசாரி பணி செய்கிறேனா என்றால செய்கிறேன். திருவிழா முடிவாகிவிட்டால் குளித்தலை காவேரி கரையில் நீர் எடுத்து வந்து தான் சாமி கும்பிடுவது வழக்கம் என்றால் முன்பு செய்தார்கள். அதாவாது சுமார் 15 வருடங்களுக்கு முன்பு செய்து வந்தார்கள்.

5. தற்போது செய்வதில்லை. 3 இனத்தை சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து எனது வீட்டிற்கு மேற்கு உள்ள காலி இடத்தில் பூஜை கூடை வைத்து பூஜை செய்து எடுத்து செல்வார்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது மீது பூஜை கூடை வைப்பதற்கு இடையூறு செய்ததாக தோகைமலை காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் கோவில் கட்டிடத்தை நான் நீக்கியதாக புகார் கொடுத்தார்கள். காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். வழக்கம் போல பயன்படுத்தி வரக்கூடிய கோவில் பயன்பாடு இடத்தில் எந்த இடையூறும் செய்யக்கூடாது என எனக்கு போலிசார் அறிவுறுத்தினார்களா என்றால் இல்லை.

6. எனக்கும் பிரதிவாதிகளும் ஏற்பட்ட முரண்பாட்டை தவறாக பயன்படுத்தி கோவில் நிலத்தை என்னுடையது என பொய்யான காரணங்களை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் கிழமேல் மற்றும் தென்புற அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டின் கிழமேல் மற்றும் தென்புற அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை செண்ட்டிற்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் 3.80 செண்ட் நிலத்திற்கு பட்டா கொடுத்தார்கள். நான் வீட்டில் குடியிருந்து நான் மின் கட்டணம் செலுத்தி வருவதற்கு பிரதிவாதிகள் ஏதேனும் தொந்தரவு கொடுத்தார்களா என்றால் இல்லை. புறம்போக்கு இடத்தை பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததற்கு என்ன காரணம் என்றால் அவ்வாறு காரணம் ஏதும் இல்லை.

7. எந்த விதமான முறையான காரணங்களும் இல்லாமல் அரசு அதிகாரிகளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வீட்டின் மேற்கே உள்ள காலி இடத்தில் இதுநாள் வரை கோவில் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. கோவில் பயன்பாட்டு இடத்தை பயன்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக எனது வீட்டு பட்டாவை இவ்வழக்கில் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டு இடத்தோடு சேர்த்து கோவில் இடமான காலி இடத்தையும் நான் பயன்படுத்துவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கோவில் இடத்தை பொறுத்து எனக்கு எந்த அனுபவமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல. கோவில் இடம் எது, வீட்டு இடம் எது என்பதை நில அளவையர் மூலமாக அளவீடு செய்ததால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் நில அளவையர் உதவி இல்லாமல் ஆணையர் தாவா சொத்தின் பௌதீக தன்மையை மட்டும் பார்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.398 ல் ஒவ்வொருவரின் அனுபவத்திற்கு ஏற்றவாறு அரசாங்கம்

பட்டா கொடுத்தது போக அதிகமான நிலத்திற்கு பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.4 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் வழக்கிற்கு பின்பு தயார் செய்யப்பட்டவை என்றும், அவை எனது குடியிருப்பு வீட்டிற்கு உரியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9. புகைப்படங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றும், அவை எனது அனுபவத்தை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 எனது குடியிருப்பு வீட்டிற்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்டத்திற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்து 2ம் அயிட்டத்திற்கு ஆவணங்கள் ஏதுமின்றி பரிகாரம் கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்டத்தை பொறுத்து பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோவில் பூசாரியாக இருந்து கொண்டு கோவில் இடமான 2ம் அயிட்டத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
Kulithalai.